# தமிழ்நாடு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டம்

(அரசு ஆணை (நிலை) எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்2)துறை, நாள் 25 .8.2006)

## உதவித்தொகை விவரம்

| | | |
|---|---|---|
| பத்தாம் வகுப்பு தேர்ச்சிபெற்றவர்களுக்கு | – | மாதம் ரூ.150/– |
| +2 வகுப்பில் தேர்ச்சி/அதற்குச் சமமானத் தகுதிபெற்றவர்களுக்கு | – | மாதம் ரூ.200/– |
| பட்டதாரிகள்/முதுகலைப் பட்டதாரிகளுக்கு | – | மாதம் ரூ.300/– |

விண்ணப்ப எண்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

வேலைவாய்ப்பகத்தின் முத்திரை (தேதியுடன்)

**உதவித்தொகை பெறுவதற்குரிய தகுதிகள்**

1. **கல்வித்தகுதி:**

அ) பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) படிப்பில் தேர்ச்சி பெற்றவர்கள்

ஆ) +2 வகுப்பில் தேர்ச்சி/அதற்குச் சமமானத் தகுதியினர்
(பட்டயப் படிப்பு, இடைநிலை ஆசிரியர் பயிற்சி முடித்தோர் போன்றவர்கள்)

இ) பட்டதாரிகள் / முதுகலைப் பட்டதாரிகள்
(பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம், விவசாயம், சட்டம் போன்ற தொழிற் பட்டப்படிப்புகள் நீங்கலாக).

2. **பதிவு செய்து காத்திருப்புக் காலம்:**

200.... –ம் ஆண்டு ………. திங்கள்………..ஆம் நாளில் ஐந்தாண்டுகளுக்குக் குறையாது வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்குக் காத்திருந்திருக்க வேண்டும்.

**3. வருமானம்:**

விண்ணப்பதாரரது குடும்பத்தின் மொத்த வருமானம் மாதமொன்றுக்கு ரூ.2000/–க்கு அல்லது ஆண்டொன்றுக்கு ரூ.24,000/–க்கு மேற்படக்கூடாது.

4. **வயது வரம்பு:**

விண்ணப்பதாரருக்கு 200....–ம் ஆண்டு………..திங்கள்………ஆம் தேதியன்று 40 வயது பூர்த்தி அடைந்திருக்கக் கூடாது. ஆதி திராவிடர்/பழங்குடியின விண்ணப்பதாரர்கள் 45 வயது பூர்த்தி அடைந்திருக்கக்கூடாது.

5. **இருப்பிடம்:**

விண்ணப்பதாரர் தம்முடைய பள்ளிக் கல்வி அல்லது கல்லூரிக் கல்வியை முழுமையாகத் தமிழ்நாட்டிலேயே படித்திருக்க வேண்டும். அல்லது அவருடைய பெற்றோர்களில் ஒருவர் அல்லது அவரது காப்பாளர் 15 ஆண்டுகளுக்குக் குறையாமல் தமிழகத்தில் வசித்து வந்திருக்க வேண்டும்.

**6. வேலைவாய்ப்பின்மை:**

விண்ணப்பதாரர் அரசுத்துறை / தனியார்த் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலோ அல்லது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டவராகவோ இருத்தல் கூடாது. மேலும் விண்ணப்பதாரர், தனியாரிடமிருந்தோ, அல்லது அரசிடமிருந்தோ வேறு எந்த வகையிலும் எந்தவிதமான உதவித்தொகையும் பெறுபவராகவும் இருத்தல் கூடாது.

7. **பள்ளி, கல்லூரிகளுக்கு அன்றாடம் சென்று பயிலும் மாணவ மாணவியர்கள்:**

விண்ணப்பதாரர் அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவ மாணவியராக (Regular students) இருத்தல் கூடாது. இந்த நிபந்தனை தொலைதூரக் கல்வி அல்லது அஞ்சல்வழிக் கல்வி கற்கும் விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

**8. ஏற்கனவே பயப் பெற்றவர்கள்:** ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு 1993 – இல் நிறுத்தம் செய்யப்பட்ட வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற மனுதாரர்களும் இப்புதிய வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்படுகின்ற வயது வரம்புகளுக்குட்பட்டு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறத் தகுதியுடைவர்கள் ஆவர்.

<u>விண்ணப்பித்தல் மற்றும் தொடர்ந்து பயன்பெறுதல் பற்றிய விவரம்:</u>

1. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறுவதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு வருவாய்த்துறையினரால் வழங்கப்படும் சான்று பெற்று மனுவுடன் சமர்ப்பிக்கவேண்டும்.

2. வேலைவாய்ப்பகத்திலிருந்து உதவித்தொகை பெற விண்ணப்பப் படிவம் கிடைத்த 30 நாட்களுக்குள் தனது மாவட்டத்திற்குள் உள்ள தேசியமயமாக்கப்பட்ட ஏதேனும் ஒரு வங்கியின் கிளையில் சேமிப்புக் கணக்கைத் (Savings Bank Account) தொடங்கி, கணக்கு எண் (Account Number) கிளையின் முழு முகவரி உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பப் படிவத்தில் அமைந்துள்ளவாறு தெரிவிக்க வேண்டும்.

3. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை காலாண்டு ரீதியில் கணக்கீடு செய்யப்பட்டு அந்தந்தக் காலாண்டு முடிவுற்ற பின்னர் விண்ணப்பதாரருடைய வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

4. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஏனையோர்களைப் பொறுத்தவரையில் 40 வயது முடிவுறும் வரையிலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரைப் பொறுத்தவரையில் 45 வயது முடிவுறும் வரையிலும் வழங்கப்படும்.

5. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்று வரும் காலத்தில் அரசுத்துறையிலோ அல்லது தனியார்த் துறையிலோ பணி நியமனம் பெற்றாலோ அல்லது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டாலோ அது தொடர்பான விவரங்களை உடனடியாக உரிய வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவிக்க வேண்டியது விண்ணப்பதாரரின் பொறுப்பாகும். அரசுத்துறையிலோ அல்லது தனியார்த் துறையிலோ பணி நியமனம் பெற்றாலோ அல்லது சுய வேலைவாய்ப்பில் ஈடுபட்டாலோ வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்குவது நிறுத்தம் செய்யப்படும்.

6. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறும் காலத்தில் பதிவைத் தொடர்ந்து புதுப்பித்து வர வேண்டும்.

7. உண்மைக்கு மாறான விவரங்கள் அளித்து உதவித்தொகை பெறுபவரின் பதிவு இரத்து செய்யப்படும்.

8. இத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவோர் ஒவ்வொரு நிதியாண்டின் தொடக்கத்திலும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சுய உறுதி ஆவணத்தை (Self Affidavit) உரிய வேலைவாய்ப்பு அலுவலகத்தில் ஏப்ரல் / மே மாதங்களுக்குள் நேரில் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வமயம் வங்கிக்கணக்குப் புத்தகம், புதுப்பித்தல் அட்டை மற்றும் இதர சான்றிதழ்களையும் கொண்டு வர வேண்டும்.

## <u>வருவாய்த்துறை சான்று</u>

**வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன் பெற மனுதாரர்கள் சமர்ப்பிக்க வேண்டிய சான்றிதழ் (வருமானம், வேலையின்மை, தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல் அல்லது பெற்றோர் அல்லது பாதுகாவலர், கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது)**

இச்சான்றிதழ் கீழ்க்கண்ட படிவத்தில் வருவாய்த்துறையில் வருவாய் ஆய்வாளர் அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலரிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் அளிக்கப்பட வேண்டும்.

1. திரு/திருமதி/செல்வி ........................................................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரரின் தாய்/தந்தை/கணவன்/மனைவி ஆகிய திரு/திருமதி .................................. ........................... ...................... ... ......................................................................................................................................... முகவரியில் வசித்து வருபவரின் மாத வருமானம் ரூ. 2000/– க்கு மிகாமலும் ஆண்டு வருமானம் ரூ. 24,000/– க்கு மிகாமலும் உள்ளது எனச்சான்று அளிக்கப்படுகிறது.

2. திரு/திருமதி/செல்வி ........................................................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார்த் துறையில் எந்தவிதமான ஊதியம் பெறும் பணியிலும் இல்லை என்றும், இவர் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடவில்லை என்றும் இவர் முழுவதுமாக வேலையில்லாமலேயே இருந்து வருகிறார் என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

3. திரு/திருமதி/செல்வி ........................................................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அரசு அல்லது தனியார்த்துறை அல்லது இதர ஆதாரங்களின் வழி எந்தவிதமான உதவித்தொகையும் பெற்று வருபவர் அல்லர் என்றும் சான்று அளிக்கப்படுகிறது.

4. திரு/திருமதி/செல்வி ........................................................ என்ற வேலைவாய்ப்பற்ற மனுதாரர் தமிழ்நாட்டிலேயே தனது பள்ளி அல்லது கல்லூரிக் கல்வியினை முடித்தவர் அல்லது இம்மனுதாரரின் பெற்றோரில் தாய்/தந்தை அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டிலேயே 15 ஆண்டுகளுக்கும் மேலாகக் குடியிருந்து வருபவர் என்று சான்று அளிக்கப்படுகிறது.

5. திரு/திருமதி/செல்வி ........................................................ என்ற வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் பயன்பெற உள்ள மனுதாரர் அன்றாடம் பள்ளி அல்லது கல்லூரிக்கு சென்று வரும் மாணவர் அல்லது மாணவியர் அல்லர் என்று சான்று அளிக்கப்படுகிறது.

இடம்:

நாள்: அலுவலக முத்திரை வருவாய்த்துறை அலுவலர்

(வருவாய் ஆய்வாளர் நிலைக்குக் குறையாத அலுவலர்)

## வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவதற்கான விண்ணப்பப் படிவம்

( அரசு ஆணை (நிலை) எண் ..72,. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்.2) துறை, நாள்...25..08.2006 )

விண்ணப்ப எண்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை

**( * )** விண்ணப்பதாரர் வரிசை எண்:

விண்ணப்பதாரரின் புகைப்படம்
பாஸ்போர்ட் அளவு இங்கு
ஒட்டப்படவேண்டும்

(புகைப்படத்தின் மேல் விண்ணப்பதாரர்
கையொப்பமிடவேண்டும்)

1. விண்ணப்பதாரரின் பெயர்
2. தந்தை /தாயார்/ கணவர் / பாதுகாவலர் பெயரும் முகவரியும்
3. விண்ணப்பதாரரின் பிறந்த தேதி வயது
4. விண்ணப்பதாரரின் முகவரி

| 5 (*) | 5.*வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெறுவதற்கான கல்வித்தகுதி | எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி | மேல்நிலை வகுப்பு (+2) / சமமானக் கல்வித்தகுதி | இளங்கலைப்பட்டம்/ முதுகலைப்பட்டம் |
|---|---|---|---|---|
| | வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த தேதி | | | |

<u>விண்ணப்பதாரரின் வங்கிக் கணக்கு பற்றிய விவரங்கள்</u>

| 6 (*) | வங்கியின் பெயர் | கிளையின் முழு முகவரி | வங்கிக் கணக்கு எண் |
|---|---|---|---|
| | | | |

7. **<u>மனுதாரர் சார்ந்த இனம்:</u>** (எந்த வகுப்பைச் சேர்ந்தவரோ அந்த வகுப்பிற்கான கட்டத்தில் ஒரு ✔ போடவும்)

| ஆதிதிராவிடர் | பழங்குடியினர் | மிகவும் பிற்பட்ட வகுப்பினர் | பிற்பட்ட வகுப்பினர் | இதர வகுப்பினர் |
|---|---|---|---|---|
| | | | | |

**குறிப்பு :– (* ) குறியிட்ட இனங்கள் அலுவலகத்தினரால் பூர்த்தி செய்யப்படும்**

**8. கல்வி/தொழில்முறைக் கல்வித் தகுதிகள்** ( தகுதி பெற்ற கல்வியில் ✔ போடவும்)

அ) எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்றவர்கள் ( )

ஆ) மேல்நிலை வகுப்பு (+2) / அதற்குச் சமமானத் தகுதியினர் ( )

இ) பட்டயப் படிப்புகள் ( )

ஈ) இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் ( )

உ) பட்டதாரிகள் ( )

ஊ) முதுகலைப் பட்டதாரிகள் ( )

9. <u>வேலைவாய்ப்பகப் பதிவு விவரம்</u>

அ) பதிவு செய்த வேலைவாய்ப்பு அலுவலகத்தின் பெயர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

ஆ) பதிவு எண் . . . . . . . . . . .. . . . . . . . . . .

இ) பதிவு செய்த தேதி . . . . . . . . . . . . . . . . . . . . .

ஈ) தேசிய தொழில் குறியீட்டு எண் . . . . . . . . . . . . . . . . . . . ..
(பதிவட்டையில் உள்ளபடி)

10) அங்க அடையாளங்கள் 1)
(கல்விச் சான்றிதழில் உள்ளபடி)

2)

11. தந்தை, தாய், மனைவி, கணவன் மற்றும்
குடும்ப உறுப்பினர் பற்றிய விவரங்கள்

| பெயர் | விண்ணப்பதாரருக்கு உறவு முறை | தொழில் மற்றும் பணிபுரியும் நிறுவனத்தின் முகவரி | மாத வருமானம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

விண்ணப்பதாரரின் கையொப்பம்

## அலுவலகப் பயனுக்கு மட்டும்

## சரிபார்த்தல் சான்றிதழ்

I. விண்ணப்பதாரர் இனம் **1–ல்** இருந்து **11–வரை** கொடுத்துள்ள விவரங்களை, வேலைவாய்ப்பகத்தில் உள்ள பதிவேடுகளில் உள்ள விவரங்களின் அடிப்படையில் சரிபார்த்ததில் அவை சரியாக உள்ளன என நான் சான்றளிக்கிறேன். வருவாய்த்துறைச் சான்று உரிய படிவத்தில் தகுந்த அலுவலரின் மேலொப்பத்துடன் பெறப்பட்டுள்ளது.

இளநிலை வேலைவாய்ப்பு அலுவலரின் ஒப்பம்

II. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை அனுமதிக்கப்பட்டது/மறுக்கப்பட்டது பற்றிய விவரங்கள்

**(அ) அனுமதித்தல்**

| | | |
|---|---|---|
| 1 | வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்ட ஆணை எண்ணும் தேதியும் | : |
| 2 | மாதமொன்றுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித்தொகை | : |
| 3 | அனுமதி தொடங்கப்பட்ட காலாண்டு | : |
| 4 | அனுமதிக்கப்பட்டது பற்றி விண்ணப்பதாரருக்குத் தகவல் அனுப்பிய தேதி | : |
| 5 | வங்கியின் பெயர் மற்றும் கிளை (முழு முகவரியுடன்) | : |
| 6 | சேமிப்பு வங்கிக் கணக்கு எண் | : |

**(ஆ) மறுத்தல்**

**வேண்டுகோள் மறுக்கப்பட்டதற்கான காரணம் :**

இடம்:

தேதி: **உதவி இயக்குநர் / மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்**

<u>காலாண்டு வாரியாக  உதவித் தொகை ஒப்பளிப்பு விவரம்</u>

| காலாண்டு | செயல்முறை ஆணை எண். | நாள் | பட்டியலில் வரிசை எண் | தொகை ரூ. | அலுவலரின் சான்றொப்பம் |
|---|---|---|---|---|---|
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |
| ............ முதல்<br>........... வரை | | | | | |

பதிவு மாற்றம் / பணியமர்த்தல் / உதவித்தொகை நிறுத்தம்  பற்றிய குறிப்பு

**<u>வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.150 / 200 / 300 அனுமதி அளிக்கப்பட்டது பற்றிய தகவல்</u>**

விண்ணப்ப எண்: | | | | | | | | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்:

**( * )** விண்ணப்பதாரர் வரிசை எண்:

நாள் :

வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 150 /200 / 300 வங்கி ஒன்றின் மூலமாகக் காலாண்டு தோறும் வழங்கும் வகையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. 200....... ம்ஆண்டு ............................ மாதம்............................ –ஆம் நாளில் முடிவடைந்த காலாண்டுக்குச் சேர வேண்டிய தொகை ................மாதத்தில் முதல் 15 நாட்களுக்குள் தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும். அடுத்து வழங்கப்படுகின்ற தொகைகள், அவை வழங்கப்படுவதற்குத் தகுதி பெற்றிருப்பின் உரிய காலாண்டினை அடுத்து வரும் மாதத்தில் 15–ஆம் தேதிக்கு முன்னர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

எதிர்காலத்தில் உதவித்தொகை தொடர்பாகத் தாங்கள் கடிதம் எதனையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பும்போது மேற்கண்ட விண்ணப்ப எண், வங்கிக் கணக்கு எண், வங்கிக்கிளை விவரங்களைத் தவறாது குறிப்பிட்டு எழுதி அனுப்ப வேண்டும்.

**உதவி இயக்குநர் / மாவட்ட வேலைவாய்ப்பு**
**அலுவலர் கையொப்பம்**

பெறுநர்

திரு/திருமதி/செல்வி.

**<u>சுய உறுதி மொழி ஆவணம்</u>**

உதவித்தொகை பெறுபவர் தொடர்ந்து பயன்பெற உதவித்தொகை பெறும் காலத்தில் ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும் ஏப்ரல்/மே மாதத்தில் நேரில் வந்து வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சுய உறுதிமொழி அளிக்க வேண்டும். நேரில் வரும்போது வங்கிக் கணக்குப் புத்தகம், இதர சான்றிதழ்கள் மற்றும் புதுப்பித்தல் ஆதாரத்துடன் வர வேண்டும்.

---

**<u>சுய உறுதிமொழி ஆவணத்திற்கான படிவம்</u>**

…………………………….. .த/பெ……………………………

…………………………….. தெரு ………………….. . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . .அஞ்சல் . . . . . . . . . . . . . வட்டம் . . . . . . . மாவட்டம் என்ற

முகவரியில் வசிக்கும் நான் பின்வரும் விவரங்களை உறுதியாகத் தெரிவிக்கிறேன்.

1. நான் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற்று வருகிறேன்.

2. தற்போது எனது பெற்றோரின் குடும்ப வருமானம் / குடும்ப உறுப்பினர்களின் அனைத்து வருமானம் / மாதத்திற்கு ரூ.2,000/−க்கும், ஆண்டு வருமானம் ரூ.24,000/−க்கும் அதிகமாக இல்லை.

3. நான் தற்போது எந்த ஒரு நிறுவனத்திலும் ஊதியம் பெறும் வேலையில் இல்லை. எந்த ஒரு சுய தொழிலையும் மேற்கொள்ளவில்லை.

4. நான் தற்போது எந்த ஒரு நிறுவனத்திலும் எந்த விதமான உதவித்தொகையும் பெறவில்லை.

5. நான் தற்போது எந்த ஒரு கல்வி நிறுவனத்திலும் தினசரி (regular Student) மாணவராகப் பயின்று வரவில்லை.

6. எந்த ஒரு காலத்திலும் நான் அரசுத்துறை / அரசு சார் நிறுவனங்கள் / உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து பணி நீக்கம் (dismissal) செய்யப்படவில்லை.

7. எனக்கு எந்த ஒரு காலத்திலும் வழக்கின் மூலம் தண்டனை அளிக்கப்படவில்லை.

8. உதவித்தொகை பெற நான் தகுதி இழப்பின் உடன் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தெரிவிக்க உறுதி அளிக்கிறேன்.

9. நான் உண்மைக்கு மாறாகத் தகவல்கள் அளித்து உதவித்தொகை பெறுவதாக அறியப்பட்டால் எனக்கு வழங்கப்படும் உதவித்தொகை நிறுத்தப்படும் எனவும், ஏற்கனவே வழங்கப்பட்ட தொகை தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டத்தின்படி (Revenue Recovery Act) வசூலிக்கப்படும் எனவும், வேலைவாய்ப்பு அலுவலகப் பதிவு இரத்து செய்யப்படும் என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

10. மேற்சொன்ன விவரங்கள் நான் அறிந்த வகையில் உண்மையானவை என்றும், மேற்கண்ட எந்த ஒரு தகவலும் உண்மைக்கு மாறாக இல்லை என்றும், நான் உதவித்தொகை பெறுவதற்காக எந்த ஒரு தகவலையும் மறைக்கவில்லை எனவும் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இடம்: பதிவு எண் கையொப்பம்

தேதி: பெயர்

முகவரி

சாட்சிக் கையொப்பம்

(பெற்றோர் அல்லது பாதுகாவலர்)

## விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகைச் சீட்டு

விண்ணப்ப எண்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைக்கான விண்ணப்பப் படிவத்தினை ................................ ம் தேதியன்று பெற்றுக் கொண்டேன். இவ்விண்ணப்பத்தினைப் பூர்த்தி செய்து அத்துடன் வருவாய்த்துறைச் சான்று, எனது வங்கி சேமிப்புக் கணக்கு எண் ஆகியவற்றை இணைத்து அவற்றை ----------ஆம் தேதிகளில் இவ்வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அவ்வாறு குறித்த தேதிக்குள் சமர்ப்பிக்கத் தவறினால் பின்னர் எனக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்குவதில் இடர்ப்பாடுகள் ஏற்பட்டு மறுக்கப்படவும் நேரலாம் என எனக்கு நேரில் இவ்வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

பதிவு எண்:

இடம்: விண்ணப்பதாரரின்கையொப்பம்

தேதி: பெயர்:

## அலுவலகப் பயனுக்கு மட்டும்

இரண்டு புதுப்பித்தல் விவரங்கள்

| வ.எண். | புதுப்பித்தல் நாள் | பதிவேட்டின் வரிசை எண் | அஞ்சலில் | நேரில் |
|---|---|---|---|---|
| 1 | | | | |
| 2 | | | | |

**புதுப்பித்தல் விவரம் சரிபார்த்தபணியாளரின் பெயரும் ஒப்பமும்**

## பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பெற்றுக்கொண்டமைக்கான வேலைவாய்ப்பு அலுவலக ஒப்புகைச் சீட்டு

விண்ணப்ப எண்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகைக்கான பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் திரு/திருமதி/செல்வி ............................................................ அவர்களிடமிருந்து....................................... ம் தேதியன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

அலுவலக முத்திரை

உதவி இயக்குநர்/
மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்